# உயர் அபாய நிலையில் இருந்த
# 173 மரங்கள் வெட்டப்பட்டன



கோலாலம்பூர், ஜூன் 28-
கடந்த 2019ஆம் ஆண்டு முதல் தற்போது வரையில் தலைநகரைச் சுற்றியுள்ள 1,488 வயதான மரங்கள் சோதனையிடப்பட்டு அவற்றுள் அபாய நிலையில் 120 மரங்கள் வெட்டப்பட்டதாக நேற்று மக்களவை கூட்டத் தொடரில் தெரிவிக்கப்பட்டது.

கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டிபிகேஎல்) இந்த தர மதிப்பீட்டு வேலையைச் செய்துள்ளது. வயதான மரங்கள் மீதான கண்காணிப்பு, சோதனை நடவடிக்கை தொடரும் என்று பிரதமர்துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தபா தெரிவித்தார்.

டிபிகேஎல் தரப்பின் பொறுப்புடைமையை வெளிக்காட்டுவதன் நோக்கில் இவ்வாண்டு ஜூன் 15ஆம் தேதி முதல் மர பராமரிப்புப் பணிகளுக்காக 21 குத்தகையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு குத்தகையாளரும் மரப் பரிசோதனையில் நிபுணத்துவம் பெற்ற பணியாளர்களை ஏற்பாடு செய்யவேண்டும் எனவும் அவர் கூறினார்.

முன்னதாக வங்சாமாஜு நாடாளுமன்ற உறுப்பினர் ஸாஹிர் ஹசான், டிபிகேஎல் மேலாண்மை கீழ் பாதுகாப்பானதாக இருப்பதை உறுதி செய்ய முன்னெடுக்கப்படும் நடவடிகைகள் குறித்து கேள்வி எழுப்பி இருந்தார்.

அவரின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மேற்கண்ட தகவல்களைப் பகிர்ந்தார். அபாய நிலையில் உள்ள மரங்கள் குறித்தும் பொதுமக்களுக்குத் தகவல் தெரிவிக்க கடந்த 2021ஆம் ஆண்டு முதல் மே மாதம் வரையில் 65 அறிவிப்புக் கடிதங்கள் வெளியிடப்பட்டதையும் ஸலிஹா சுட்டிக்காட்டினார்.

IN